<u>4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.</u>

நாள். 12.08.2025
எம்.சி.ஓ.பி எண்.2600/2024
ம.சா. 1
பெயர். கதிரேசன்
த/பெ.திரு. கணேசன்
வயது. 28

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 11 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

30.12.2023 அன்று இரவு 11.45 மணியளவில் இந்த விபத்து நடந்தது. சாலையில் யூடர்ன் எடுப்பதற்காக திரும்பும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் சரியான சாலையில் தான் வந்தது என்றால் பள்ளிகரணை முதல் வேளசேரி சாலையில் வந்தது நான் வேளசேரியிலிருந்து பள்ளிகரணை சென்று கொண்டிருந்தது. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது. எனக்கு ஓட்டுநர் தொலைந்துவிட்டது என்று புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. வழக்கற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் பற்கள் உடைந்துவிட்டதான சொல்லியுள்ளபட்சத்தில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பிறகு தொடர் சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாகர்கோவிலில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 8 மற்றும் மசாஆ 9 தாக்கல் செய்துள்ளேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை, வரைப்படம் மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தலைகவசம் அணிந்திருந்தால் முகத்தில் காயங்கள் ஏற்பட்டு இருக்க வாய்ப்பு இல்லை என்ற சொன்னால் நான் தலைகவசம் அணிந்திருந்தேன். இந்த விபத்து காயங்கள் அனைத்தும் சிகிச்சைக்கு பிறகு குணமடைந்துவிட்டது என்றும் இந்த வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றல் சரியல்ல. தொழில் வருமானம் குறித்து எந்த ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்துக்கு காரணம் நான் தான் என்றும் என்னுடைய அஜாக்கிதையும் கவனக்குறைவும் தான் காரணம் என்றும் 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH